பதிவு எண். M 6331 ★ தொலைபேசி. 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: கார்த்திகை 16 (2—12—71) வியாழன் வெளியீடு: கார்த்திகை 17 (3—12—71) வெள்ளி [இதழ்: 142

## தொடக்கக் கல்வி வளர்ச்சிக்குத் திட்டம்

### மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 2—

தொடக்கக் கல்வி வளர்ச்சிக்காக ஒவ்வொரு மாநிலத்திலும் தனித் தனித் திட்டங்களைத் தயாரிக்க மத்திய கல்வி அமைச்சகம் பரிசீலித்துவருகிறது; இதற்கான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இத்தகவலை, மத்திய கல்வித் துறைத் துணையமைச்சர் பி. டி. யாதவ் நாடாளுமன்ற மேலவையில் ஒரு கேள்விக்கு எழுத்துமூலம் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

# தி.மு.கழகக் கருத்துக்கு இந்திரா ஒப்புதல்

புதுடில்லி, டிச 2—

அரசியல் சட்டத்தின் சொத்துரிமை பற்றிய விதிகள் உட்பட எந்த விதியையும் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்கு உரிமை வழங்கும் அரசியல் சட்ட 25-வது திருத்த மசோதா நேற்று மக்களவையில் மிகப் பெரும்பான்மையான வாக்குகள் பெற்று நிறைவேறியது.

இந்தியாவின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெறும் இந்தத் திருத்த மசோதா நிறைவேறியதன் மூலம் 'நாடாளுமன்றமே உயர்தன்மை வாய்ந்தது' என்பது உறுதியாக்கப்பட்டு விட்டது.

இந்தத் திருத்தத்துக்கு ஆதரவாக இந்திரா காங்கிரசு, தி. மு கழகம், வலது கம்யூனிஸ்டு, இடது கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகள் வாக்கு அளித்தன.

சுதந்தராக் கட்சியும் -- ஜனசங்கமும் -- சில சிண்டிகேட் உறுப்பினர்களும் திருத்த மசோதாவுக்கு எதிராக வாக்கு அளித்தனர்.

திருத்த மசோதாவுக்கு ஆதரவாக சிண்டிகேட்டைச் சேர்ந்த காமராசர் வாக்கு அளித்தார்.

வாக்கெடுப்பின்போது மொரார்ஜி தேசாய், அவையில் இல்லை.

திருத்த மசோதாவுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் 353; எதிரான வாக்குகள் 20; ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாதவர்கள் 3 பேர்.

## முக்கிய நோக்கங்கள்

25-வது திருத்தத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

பொதுப் பணிகளுக்காக அரசு எடுத்துக்கொள்ளும் சொத்துக்களுக்காக நஷ்ட ஈடு கொடுப்பது பற்றியது ஒன்றாகும்.

ஏகபோகத்தை உடைப்பதும்-- பொருளாதார பலம் சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுப்பதும் மற்றொன்றாகும்.

## தி. மு. க. எதிர்த்த திருத்தப் பிரிவுகளை அரசு கொண்டுவரவில்லை

திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றத் தி.மு. கழகம் ஆதரவு தெரிவித்தபோதிலும், அரசியல் சட்ட 39 'பி' -- 'சி' ஆகிய பிரிவுகளுக்கு அரசு கொண்டுவரவிருந்த திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்ததால் அத்திருத்தங்கள், அவையில் நேற்று முன்மொழியப்படவில்லை.

"என்னுடைய கட்சியைச் சேர்ந்த சிலரும்--தி. மு. கழக

(4-ம் பக்கம் பார்க்க)

# இரத்தமும் வியர்வையும் சிந்தியவர் யார்?

## முதலாளிகளின் பாதுகாவலர்கட்கு இந்திரா காந்தி தரும் சூடு

### அமைதி வழியில் புரட்சி காணும் நடவடிக்கை பற்றி விளக்கம்

புதுடில்லி, டிச. 2—

"தனியார் உடைமைகளுக்கு ஒழுங்குபடுத்தப்படாத உரிமை இருக்கவேண்டும் என்றோ, சமூக -- பொருளாதார முன்னேற்றத்திற்குச் சொத்துரிமை தடையாக இருக்கவேண்டும் என்றோ அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதவில்லை.

"சமுதாயத்தில் நிலவும் ஏழ்மை -- ஏற்றத்தாழ்வு -- அநீதி ஆகியவற்றை இந்த மசோதா ஒரே இரவில் மாற்றிவிடாது; சரியான வழியில் நம்மை அழைத்துச் செல்லக்கூடிய ஒரு சிறிய நடவடிக்கையே இந்த மசோதாவாகும்.

"இந்த மசோதாவின்கீழ் அளிக்கப்படும் அதிகாரத்தை நாடாளுமன்றம் தவறாகப் பயன்படுத்தும் என்று கருதுவது பேதைமை ஆகும்; சட்ட அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டால் நீதித் துறை அவற்றைப் பரிசீலனை செய்யலாம்.

"சனநாயக உரிமைகளின் பாதுகாவலன் நாடாளுமன்றம்தான்; மாறுதலையோ அல்லது சமூக நீதியையோ ஏற்படுத்த நாடாளுமன்றத்தால் இயலவில்லை என்றால், மாறுதல்கள், நாடாளுமன்றத்தை மீறி ஏற்படும்; அதே நேரத்தில் நாடாளுமன்றம் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால், மக்கள் அந்த நாடாளுமன்றத்தை நீண்ட காலம் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில், அரசியல் சட்ட 25-வது திருத்த மசோதாமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

'சட்டத்தில் உள்ள தடைகளை எல்லாம் உடனடியாக உடைத்தெறிய வேண்டும்' என்று இடது கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் கூறினார்கள்; 'புரட்சி ஏற்பட வேண்டும்' என்றும் கூறினார்கள்; கேட்பதற்கு இவைகள் எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன.

முன்னேற்றமடைவதற்கு ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு முறையைக் கையாளுகின்றன; இந்தியாவில், அதை அமைதியாக -- சனநாயக முறையில் செய்கிறோம்.

'இரத்தம் சிந்தி -- வியர்வை கொட்டி, முதலாளிகள் சொத்துச் சேர்த்தார்கள்; அதைப் பறிக்கலாமா?' என்று பிராங்க் அந்தோணி கேட்டார்.

இரத்தம் சிந்தப்பட்டது உண்மை --வியர்வை கொட்டியதும் உண்மை! ஆனால், சொத்துக்கள் சேர்த்துவைத்துக்கொண்டுள்ள அதிபர்களா இரத்தம் சிந்தினார்கள்? தொழிலாளர்கள் அல்லவா இரத்தம் சிந்தினார்கள்--வியர்வை வடித்தார்கள்? அதில் பயனடைந்தது முதலாளிகள்தான்!"

# முதலமைச்சர் கலைஞர் தாயகம் திரும்புகிறார்

## மாபெரும் வரவேற்பு அளிக்க சிறப்புமிக்க ஏற்பாடுகள்

### நவ. 5-ம் நாள் பம்பாயிலிருந்து புறப்பாடு -- பிற்பகல் 1-மணிக்கு மீனம்பாக்கம் வருகை

சென்னை, டிச. 2—

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் -- முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தமது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, 5—12—71 ஞாயிறு பிற்பகல் 1-05 மணியளவில் விமானம் மூலம் சென்னை வந்து சேருகிறார்.

விமான நிலையத்தில் அவருக்கு சிறப்புமிக்க வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்க அரசின் அழைப்பின் மீது முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நவம்பர் 8ம் நாளன்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்தார்.

அவருடைய அமெரிக்கச் சுற்றுப்பயணம் நாளை முடிவடைகிறது; இரவு 8-மணிக்கு (அமெரிக்க நேரம்) நியூயார்க் நகரிலிருந்து இலண்டனுக்குப் பயணமாகிறார்; இலண்டன் நகரில் ஒரு நாள் தங்குகிறார்; பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை விடியற்காலை 4-20 மணியளவில் பம்பாய் வந்து சேருகிறார்.

பம்பாயிலிருந்து காலை 11-30 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 1-05 மணிக்கு சென்னை வந்து சேருகிறார்.

## வாஷிங்டனில்:

வாஷிங்டன் நகரில் அவர், உலக பாங்கியின் தலைவர் மக்னமாரா, அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் ஹம்ப்ரே, மேரிலாந்து கவர்னர் மார்வின் மண்டல் ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார்.

பின்னர், வாஷிங்டனிலிருந்து விமானம் மூலம் நியூயார்க்குக்கு வந்து -- அங்கிருந்து தாயகம் திரும்புகிறார்.

## மருத்துவமனையில் உடல் பரிசோதனை

வாஷிங்டன், டிச. 2—

அமெரிக்காவில் தமது சுற்றுப் பயணத்தின் கடைசிப் பகுதியை முடித்துக்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், நேற்று பால்டிமோரில் உள்ள ஹாப்கின மருத்துவமனைக்குச் சென்று உடல் பரிசோதனை செய்துகொண்டார்.

இங்குதான் அவருக்கு இரு வாரங்களுக்குமுன் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

கலைஞர் அவர்கள் நல்ல குணம் அடைந்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## சென்னை மேயர் தொலைபேசித் தொடர்பு -- கலைஞர் வாழ்த்து

சென்னை, டிச. 2—

சென்னை மாநகராட்சியின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி காமாட்சி செயராமன், வாஷிங்டன் நகருக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார்; அதுபோது, மேயரிடம் கலைஞர் கூறியதாவது:—

"சென்னை மாநகராட்சியின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சென்னை நகருக்குப் பல பணிகளைச் செய்வதற்கு உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது! அதற்காக உங்களுக்கு என் பாராட்டுதலையும் -- ஆசியையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

## துணை மேயர்

துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள என். வி. என். சோமு அவர்களும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு முதலமைச்சருடன் பேசினார்.

துணை மேயராகத் தன்னைத் தேர்ந்தெடுக்கச் செய்ததைக் காகத் தனது நன்றியையும் -- வணக்கத்தையும் முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொண்டார்; உடல்நலம் பற்றியும் விசாரித்தார்.

தான், முழு நலத்துடன் இருப்பதாகவும், 5-ம் தேதி சென்னை திரும்புவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

## வி. முனுசாமி

சென்னை மாநகராட்சி தி.மு.க. தலைவர் வி. முனுசாமி அவர்களும், கலைஞருடன் தொலைபேசியில தொடர்புகொண்டு நலம் விசாரித்தார்.

## வங்க தேசத்தில் 54,000 சதுர கி.மீ. பகுதி விடுதலை

முஜீப் நகர், டிச. 2—

வங்க தேசத்தில இதுவரையில் மொத்தம் 23,200 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், வங்க தேச அரசு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தகவலைத் தெரிவித்த வங்க தேச அரசின் பிரதிநிதி ஒருவர், 'மொத்தம் 54,000 சதுர கிலோ மீட்டர் பகுதி விடுவிக்கப்பட்டிருக்கிறது' என்றும் கூறினார்.

## கங்கை -- காவிரி இணைப்புத் திட்டம்

### ஐ.நா. நிபுணர் குழு வருகை

புதுடில்லி, டிச. 2—

கங்கையையும் -- காவிரியையும் இணைப்பதற்கான சாத்தியக்கூறு பற்றி இந்திய அரசுக்கு யோசனை கூறுவதற்காக 5 பேர் கொண்ட ஐ. நா. நிபுணர் குழு ஒன்று நேற்று டில்லி வந்து சேர்ந்தது.

கங்கை நதியில் பயன்படுத்தப்படாமல் வீணாகும் தண்ணீரை மத்திய இந்தியாவிலும் -- தென்னிந்தியாவிலும் பாசனத்துக்கும், குடிநீருக்கும் பயன்படுத்திக் கொள்ளுவது இயலக்கூடியதா -- உள்நாட்டு நதிப் போக்குவரத்துக்கு இதைப் பயன்படுத்திக் கொள்வது இயலுமா என்பது பற்றி இந்தக் குழு ஆய்வு நடத்தும்.

# நெருக்கடி நேரத்தில் தொழில்துறை அமைதி

## அமைச்சர் என். வி. நடராசன் வேண்டுகோள்-- தொழிலாளர் -- தொழிலதிபர்கள் இணக்கம்

### இரு சார்புப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டத்தில் முடிவு

சென்னை, நவ. 30—

வங்க தேசப் பிரச்சினையால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையையொட்டித் தமிழ்நாட்டில் தொழில் அமைதியைக் கட்டிக் காக்கத் தொழிலாளர்களும் -- தொழிலதிபர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தொழில் உற்பத்தி -- தொழிலாளர் நலன் ஆகியவற்றுக்கு இடையூறு ஏற்படாமல் தொழில் அமைதியைக் காக்கவும் -- நேர்முகப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும் அரசுக்குத் தங்கள் முழு ஆதரவையும் அளிப்பதென அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களின் வேண்டுகோளின் பேரில், இராஜாஜி மண்டபத்தில் கடந்த திங்களன்று நடந்த ஒரு கூட்டத்தில் இதுபற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தென் இந்தியத் தொழிலதிபர்கள் கூட்டமைப்பு -- உரிமையாளர்கள் சங்கம் -- தோட்டத் தொழில் நிர்வாகிகள் சங்கம் -- பொறியியல் சங்கம் -- சர்க்கரை ஆலைகள் சங்கம்--பாரத் எலெக்ட்ரிகல்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தொழிலாளர்களின் சார்பில், இந்திய தொழிற்சங்கமையம்-- அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசு -- தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை-- இந்து மஜ்தூர் சபா -- சோஷலிஸ்டுக் கட்சி மற்றும் பல சுயேச்சை தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு தொழில்துறை செயலாளர் வி. எஸ். சுப்பையா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் உரையாற்றுகையில், 'நாட்டில் அவசர நிலைமை முறையாகப் பிரகடனம் செய்யப்படாவிட்டாலும், தமிழ்நாட்டில் தொழில் அமைதியைக் கட்டிக் காத்து நமது கடமையை ஆற்ற வேண்டிய ஒரு நெருக்கடியான தருணம் ஏற்பட்டுள்ளது' என்று கூறினார்.

இதற்காகக் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற உறுதி கொள்ளவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார் :—

1. பொருட்களை உற்பத்திச் செய்தல் -- பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் எத்தகைய சூழ்நிலையிலும் குறுக்கீடுகள் ஏதும் ஏற்படாமலிருக்க நாம் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. தொழிலாளர்களையும் -- இயந்திரங்கள், பொருள்கள் ஆகியவற்றையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்குத் தடையாக உள்ள இடையூறுகள் நீக்கப்பட வேண்டும்; இயந்திரங்கள் எவையும் செயல்படாமல் கிடப்பதைத் தடுக்க வேண்டும்; விரயம் ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும்; தொழிற்சாலைகளை நடத்துவதில் பெரும் அளவுக்குச் சிக்கனத்தைக் கடைபிடிப்பதில் நிர்வாகிகள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

3. தொழிலுக்கு வராமல் நின்று போகும் நிலை -- பணியில் அசட்டை -- கடமை புறக்கணிப்பு ஆகியவை ஏற்படாத வகையில் தொழிற் சங்கங்கள் கடமையாற்ற வேண்டும்.

4. தொழில் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதனாலோ, உற்பத்தியைப் பெருக்க முனைப்பான முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்பதனாலோ தொழிற்சாலைகளில் எழக்கூடிய நியாயமான தகராறுகள் அடக்கப்பட்டுவிடும் என்பது பொருள் அல்ல; ஆனால், இத்தகைய தகராறுகள் முடிவற்ற சச்சரவில் அல்லது வழக்கில் முடியக்கூடாது என்பது தான் தமிழ்நாடு அரசின் நோக்கமாகும்; நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலமோ, சமரச உடன்படிக்கை மூலமாகவோ வேறுபாடுகளை விரைவாகத் தீர்க்க முயலுவதுடன், அவ்வாறு தீர்க்கப்பட முடியாவிட்டால் இரு தரப்பினரும் தாமே முன்வந்து நடுவர் தீர்ப்பின் மூலம் அத்தகராறுக்குத் தீர்வு காண வேண்டும்.

5. அவசியமேற்பட்டால், சமரச உடன்படிக்கையை விரைவாக நிறைவேற்றவும் -- நடுவர் தீர்ப்பு விரைவில் கிடைப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

அமைச்சரின் வேண்டுகோளுக்கு தொழிலதிபர்கள் இணக்கம் தெரிவித்தனர்; ஆனால், தொழில் தகராறுகளில், நிர்வாகிகளும் -- ஊழியர்களும் தாமே முன்வந்து நடுவர் தீர்ப்பின் மூலம் தகராறுக்குத் தீர்வு காணும் யோசனை பற்றி அவர்கள் ஐயப்பாடு தெரிவித்தனர்; தொழில் தகராறுகளை உடனடியாகத் தீர்க்க வேண்டியது அவசியம் என்றும், சட்டத்தின் பல்வேறு விதிகளின்படி அவை தீர்க்கப்பட வேண்டும் என்றும், 'நடுவர் தீர்ப்பு'க்கு விடுவதற்கு அவசியம் நேராமல் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

"இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து கொண்டே போகும் சமயத்தில் தொழில் அமைதி என்பது நடைமுறைக்கு இயலாது; எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று தொழிலாளர் தலைவர்கள் கோரினர்.

"தொழில் தகராறுகளை நடுவர் தீர்ப்பு மூலம் தீர்ப்பதற்குத் தொழில் தகராறுகள் சட்டத்தில் வகை செய்யவேண்டும்" என்றும் அவர்கள் கோரினர்.

"தொழிலதிபர்கள் -- தொழிலாளர் தலைவர்கள் ஆகியோரின் கருத்துக்களும் -- கோரிக்கைகளும் பரிசிலனை செய்யப்படும்; முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன் கலந்து ஆலோசித்து இணக்கமான தீர்வு காணப்படும்" என்று அமைச்சர் என். வி. நடராசன் தெரிவித்தார்.

"இருதரப்பினரும், ஓராண்டுக் காலத்திற்குப் பொறுமையையும் அமைதியையும் கடைப்பிடிக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

---

## புதுவகைத் தானியக் கண்டுபிடிப்பில் இந்தியா

"புதுவகைத் தானியப் பயிர்களைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவதில் இந்தியா வழிகாட்டியாக இருக்கிறது" என்று பிரிட்டிஷ் வேளாண்மை நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

புதிய தானியப் பயிர்வகை அறிமுகப்படுத்தும் முறை ஒன்றை இந்தியா 1965-ல் கண்டுபிடித்துள்ளது; பிற நாடுகளில் புதுப் பயிர் வகை உருவாகக் குறைந்தது 15 ஆண்டுகள் ஆகின்றன: ஆனால், இந்தியாவில் கண்டுபிடித்துள்ள சிறப்பு முறைப்படி நான்கு ஆண்டுகள் அல்லது அதற்கும் குறைவான காலத்தில் புதுப் பயிர் உருவாக்க முடிகிறது; இந்திய முறையைப் பின்பற்றி பிரிட்டனும் புதிய பயிர்வகைகளை அறிமுகப்படுத்தவிருக்கிறது.

இந்தியாவின் கண்டுபிடிப்பின்படி மகரந்தப் பருவத்திலேயே சிறப்பு உரமிட்டுப் புதுவகைப் பயிர்களை ஆய்வுக்கூடத்தில் உருவாக்கலாம்.

---

சிம்சன் தொழிலாளர் பிரச்சினை :

# அரசின் நிலை விளக்கம்

## சமூகத் தீர்வுக்கு வழிவகுக்கச் செயல்படுவது அவசியம்

### அமைச்சர் என். வி. நடராசன் தரும் உறுதி

சென்னை, டிச. 2 -

"சிம்சன் தொழிற் சங்கத் தகராறில் அரசாங்கம் தலையிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை எதுவுமில்லை; அங்கு நடப்பது தொழில் தகராறு அல்ல; -- தொழிற் சங்கங்களிடையேயான போட்டியேயாகும் -- அரசியல் ரீதியாக நடத்தப்படும் கிளர்ச்சியேயாகும்; இதில் அரசு எப்படித் தலையிட்டு நடவடிக்கை எடுக்கமுடியும்?

"சிம்சன் பிரச்சினை சுமூகமாகத் தீர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது :—

**"எஸ். ஆர். வி. எஸ். நிறுவனத்தில் வேலையிழந்த 123 தொழிலாளர்களுக்கும் படிப்படியாக வேலை வாங்கித் தருகிறேன் -- மற்றவர்கள் வேலைக்குச் செல்லுங்கள்--என்று சொன்னேன்; இரண்டு நாட்களில் வேலைக்குத் திரும்புவதாகச் சொன்னவர்கள் போகவில்லை.**

"சிம்சன் தொழிற் சங்கத் தலைவர் தேர்தல் சட்டப்படி நடந்துள்ளது; தலைவரை மாற்ற வேண்டும் என்பதில் அரசு எப்படித் தலையிட முடியும்? ஒரு தொழிற் சங்கத் தலைவர் தேர்தலிலோ அல்லது ஒருவரைத் தலைவராக நியமிப்பதிலோ அல்லது 'டிஸ்மிஸ்' செய்வதிலோ அரசு எப்படித் தலையிட முடியும்!

"பெரும்பான்மை முடிவுப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது; இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு ஒன்றரைமாத காலம்வரை அதிக உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது; அதற்குப் பிறகு பிரச்சினைகள் கிளப்பப்பட்டு அரசியல் காரணத்திற்காக கிளர்ச்சி நடத்தப்படுகிறது; ஏற்கனவே பெரும்பான்மைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏதோ காரணம் காட்டி, 'ரத்து செய்ய வேண்டும்' என்று கோருவதானது, நாளை தொழிலதிபர்களும் இதேபோல் ஏதாவது ஒரு காரணம் காட்டி, ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மறுபரிசிலனை செய்யுமாறோ --- ரத்து செய்யுமாறோ கோருவதற்கு ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடாதா?

கேள்வி :—"வலது கம்யூனிஸ்டுக் கட்சி உள்ளிட்ட தி. மு. கழகத் தோழமைக் கட்சிகளும் இந்தக் கோரிக்கைகளை ஆதரிக்கின்றனவே?"

அமைச்சர் என்.வி.என். :—"அரசியல் ரீதியாக எங்களோடு தோழமை உறவு கொண்டுள்ள கட்சிகளும் தொழிற் சங்க ரீதியில் தி. மு. கழகம் வளருவதையும், பலம் பெறுவதையும் விரும்பவில்லை என்பது அவர்கள் (தோழமைக் கட்சியினர்) நடவடிக்கைகளிலிருந்து தெரிகிறது."

அமைச்சர் என்.வி.என். அவர்கள் மேலும் கூறியதாவது :—

"தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அரசு இந்தப் பிரச்சினையில் பெரும் அளவில் நிதானத்துடன் நடந்து கொண்டு வருகிறது; எங்கள் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்துத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவதாக இருந்தால், ஒரு சுமூகமான முடிவு ஏற்படவும், எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ள கதவடைப்பை இரத்துச் செய்யவும், அடிசன் நிறுவனப் பிரச்சினையில் ஒரு சுமூகத் தீர்வுக்காக முத்தரப்பு மாநாடு கூட்டிப் பேசி முடிவு செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்கலாம்."

கேள்வி :—"சிம்சன் கம்பெனி தகராறு காரணமாக மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தப் போவதாகச் சொல்கிருர்களே!"

அமைச்சர் என். வி. என். :— "சென்னை நகர அளவிலேயே நடத்துவதற்கு நியாயமில்லை எனும்போது, மாநில அளவில் நடத்த என்ன நியாயம் இருக்கிறது? சிம்சன் ஆகவே, அரசாங்கத்தின் நிதானம் -- நல்லெண்ணம் இவற்றைப் புரிந்து கொண்டு, அரசாங்கத்தின் வேண்டுகோளை மதித்து, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

---

# அமைச்சர் என். வி. நடராசன் பிறந்த நாள் விழா

## பெரியார் -- நாவலர் -- ம. பொ. சிவஞானம் பாராட்டுரை வழங்கினர்

சென்னை, நவ. 29—

தமிழகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சரும் -- கழகத் துணைப் பொதுச்செயலாளருமான திரு. என். வி. நடராசன் அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழா, சென்னை 28-வது வட்டம் கொண்டியம்பதியில் -- அமைச்சர் கோவிந்தசாமி மன்றத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி நடைபெற்ற கூட்டத்துக்குத் தோழர் இராதா கிருஷ்ணன் தலைமைவகித்தார்.

தோழர்கள் ஆடலரசு, இராசசேகர், இலட்சுமிகாந்தன், திருப்பத்தூர் இராமமூர்த்தி, 'விடுதலை' வீரமணி, சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், நாவலர் இரா. நெடுஞ்செழியன், தந்தை பெரியார் ஆகியோர் என். வி. என். அவர்களை வாழ்த்திப் பாராட்டிப் பேசினர்.

இவ்விழாவில் மன்றத்தின் சார்பில் தோழர்கள் அமைச்சர் என். வி. என். அவர்களை வாழ்த்திப் பாராட்டிப் பேசினர்.

இவ்விழாவில் மன்றத்தின் சார்பில் தோழர்கள் அமைச்சர் என். வி. என். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்; மலராடை அணிவித்து மலர்க் கிரீடம் சூட்டினர்.

அமைச்சர் என். வி. என். அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

---

# மனிதனின் கண்களைத் திறந்தார் பெரியார்

## அரசியலில் சனநாயக விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தினர் அண்ணு

### தி. மு. கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிகு சாதனை--- சிகாகோ பல்கலைக் கழகத்தில் கலைஞர் விளக்கம்

சிகாகோ, நவ. 31–

"'எல்லாம் அவனவன் தலையில் எழுதியபடிதான் நடக்கும்' என்று ஏமாற்றுகிறவன் கூற – அதனை ஏமாற்றப்பட்டவனும் ஏற்றுக்கொண்டிருந்த காலத்தை மாற்றி, அந்தத் தலையெழுத்தைத் திருப்பி எழுத நாங்கள் எழுதுகோல் பிடித்திருக்கிறோம்; அதில் இந்தியாவில் இப்போது தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறதென்றால் – எங்கள் கட்சி – மக்களிடம் உருவாக்கி வைத்திருக்கின்ற அரசியல் விழிப்புதான் காரணம்!

"சாதாரண மக்களுக்குத் தொண்டு செய்ய அந்தஸ்து மிக்க குடும்பத்தினர்தான் பதவிப் பொறுப்புகள் ஏற்க வேண்டுமென்றிருந்த ஐதீகத்தை அறவே மாற்றி, சாமானிய மக்களுக்குத் தொண்டாற்ற அந்தச் சாமானிய மக்களின் மத்தியிலிருந்தே தலைவர்களைத் தோன்றச் செய்த பெருமை எங்கள் அரசியல் கட்சியின் அஸ்திவாரமாக அமைந்த சுயமரியாதை இயக்கத்திற்கு உண்டு!

"பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் – எங்கள் நாட்டு மனிதனின் கண்களைத் திறந்தது! அண்ணாவின் அரசியல் ஈடுபாடு – அந்த மனிதனுக்கு சனநாயக உணர்வுகளைத் தெளிவுபடுத்தியது!

"பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற நீங்கள், எங்கள் இயக்க வளர்ச்சியைப் பற்றியும் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காண மகிழ்கிறேன்.

"இந்தியாவின் முன்னாள் தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்கள் இந்தியா முழுமைக்கும் பரப்பிடத் தொடங்கிய சனநாயக ஒளி – தமிழகத்தில் முழுப் பிரகாசமாகத் திகழ்வதற்குக் காரணம். எங்கள் இயக்கம் பட்டிதொட்டிகளில் உள்ள ஏழை – எளிய – சாதாரண மக்களிடமும், கல்வி அறிவற்ற மக்களிடமும் சனநாயகத் தத்துவத்தை ஓயாமல் பிரச்சாரம் செய்வதுதான்!

"தன் கையில் தரப்படுகின்ற வாக்குச் சீட்டின் சக்தியை ஒவ்வொரு குடிமகனும் இன்று உணர்ந்திருக்கிறான்!

"அதனால், 'அரசாங்கத்தின் அச்சாணி சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ இருக்கிறது' என்று அடையாளத்திற்காகச் சொன்னாலும், உண்மையிலேயே மக்கள் மத்தியில்தான் அந்த அச்சாணி இருக்கிறது! அவர்கள்தான் எங்களைத் தமிழ்நாட்டின் ஆளும் கட்சியாக மாற்றியிருக்கிறார்கள்!

"நாங்கள் போற்றிவரும் அரசியல் பண்பாடு, நீண்டகாலமாகவே ஆளும் கட்சிக்கும் – எதிர்க் கட்சிக்கும் இடையேயுள்ள 'பலகை'யின் அகலத்தை வெகுவாகக் குறைத்திருக்கிறது!"

என்று, தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சிகாகோ பல்கலைக் கழகத்தில் சிறப்புரையாற்றுகையில் தெளிவுபடுத்தினார்; அவர் மேலும் பேசியதாவது :—

"விவேகானந்தரின் பொன்மொழிகள் எதிரொலித்த நகரம் – இந்த எழில்மிகு சிகாகோ நகரமாகும்.

**அந்தப் பெருமைக்குரிய மனிதர் பிறந்த நாட்டிலிருந்து--அமைதி வழியில் விடுதலைப் போர் நடத்தி வெற்றி கண்ட காந்தியடிகள் தோன்றிய நாட்டிலிருந்து— இருள் மிகுந்திருந்த தென் பகுதியில் பகுத்தறிவு ஒளி பரப்பிய பெரியார் இராமசாமியும் --அரசியலில் புது வழி வகுத்த அறிஞர் அண்ணாவும் தோன்றிய நிலப் பரப்பிலிருந்து ஒரு பெரிய மக்கள் இயக்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் உங்களையெல்லாம் இந்த அரசியல் கருத்தரங்கில் சந்திக்கிறேன்.**

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று எச்சரிக்கை விடுத்த சிலப்பதிகாரம், சேர -- சோழ -- பாண்டியர் என்ற மூவேந்தர் ஆண்ட நாடுகளின் அரசியல் சிறப்பை இன்னமும் விளக்கிக் கொண்டிருக்கிறது!

அரசியலுக்கென ஒரு தனி அதிகாரமே வகுத்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் நெறி கண்ட வள்ளுவரின் திருக்குறள் மணம் கமழும் நாடு நான் பிறந்த தமிழ் நாடு!

அந்தப் புகழ்மிக்க மாநிலத்தின் நான்கு கோடி மக்களின் கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல், இருபது ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த ஒரு பெரிய கட்சியை சனநாயகப் போர்க்களத்தில் சந்தித்து -- பதினெட்டே ஆண்டுகளில் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி மாற்றத்தைச் செய்த சரித்திரம் என்னுடைய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு!

அடிமை விலங்கொடிந்து ஆனந்த சுதந்தரம் வந்தபிறகும், எதிர்பார்த்த ஒளிமிகு வாழ்வு எங்கள் மக்களுக்குக் கிட்டவில்லை!

ஆளவந்தவர்களிடம் காணப்பட்ட அக்கறையற்ற தன்மை அதற்கொரு காரணமாயினும், இந்திய நாடு அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடு என்பதை மறந்துவிட முடியாது!

ஆறு பிரேசில் நாடுகள் -- ஒன்பது நைஜீரியாக்கள் -- மதினைந்து எகிப்துகள் -- கிட்டத்தட்ட மூன்று அமெரிக்க நாடுகள் -- இந்த மக்கள் தொகையைக் கொண்டது இந்திய நாடு; அதற்காக மக்கள் தொகைக் கணக்கையும் -- அதன் சுமையையும் கூறிக் கொண்டே பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிடவும் கூடாது!

புதிய சிந்தனையும் -- புதிய கண்ணோட்டமும் தேவைப்பட்டதை இந்திய மக்கள் உணர்ந்தனர்! இந்தியாவின் முற்போக்குத் தலைவர்கள் உணர்ந்தனர்!

முற்போக்குக் கொள்கைகளைத் தீவிரப்படுத்துவதில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி நாட்டம் கொண்டுள்ளார்!

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கைந்து ஆண்டுகளில், தாழத்தப்பட்டுக் கிடக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் -- பின்தங்கிய மக்கள் நலனுக்கும் திட்டங்கள் வகுத்துச் செயல்படுகிறோம்!

பட்டிதொட்டியெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும், மின்வசதி பெருக்கிடவும் தீவிரமாகச் செயல்படுகிறோம்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சி வேகமாக நடைபெறுகிறது!

குடிசைகளை மாற்றி நல்ல வீடு கட்டிக் கட்டித் தருகிறோம்!

குடியிருப்பு மனைகள் சொந்தமில்லாமல் இருந்த விவசாயத் தொழிலாளிக்கு அவைகளைச் சொந்தமாக்கச் சட்டம் செய்துள்ளோம்!

நிலமற்ற ஏழை -- எளியோர் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டோருக்கு நிலப் பட்டாக்கள் வழங்கியுள்ளோம்!

இலக்கியப் புகழும் வரலாற்றுப் புகழ்மிக்க தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறோம்!

**இவைகளால் எல்லாம் நாங்கள் திருப்தியடைந்து விட்டோமா என்றால் இல்லை; பண்டித நேரு ஒரு முறை கூறியது போல், கடைசியாக ஒரு ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும்வரையில் எங்கள் பணி முடிந்ததாக அர்த்தமில்லை!**

மிகப் பெரிய இந்திய நாட்டில், ஒவ்வொரு மாநில மக்களுக்கும் நல்வாழ்வு பெருகி -- மாநிலங்கள் மேலும் மேலும் பலமும் வளமும் பெறவேண்டுமானால், மத்திய அரசில் குவிந்துள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டும் -- என்று 'மாநில சுயாட்சி'க் குரலை தி. மு. கழகம் எழுப்பி வருகிறது; மத்திய அரசை எந்த வகையிலும் பலவீனப்படுத்தாமல், மாநில சுயாட்சி அமைந்திட வழி வகைகள் உண்டு; அவைகளை விவாதித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

ஒரு சனநாயக நாட்டில் இதனைப் பேசித் தீர்த்துக்கொள்வது இயலாத காரியமல்ல; இதனை வலியுறுத்திப் பேச இப்போது இந்தியாவில் நிலைமைகள் சரியில்லை; எண்ணிய தீவிரத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் எல்லையோர ஆக்கிரமிப்பு!

**ஒரு சனநாயக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சோதனையை அமெரிக்கா போன்ற சனநாயக நாடுகள், தாமதமின்றித் தயக்கம் காட்டாது தவிர்த்திட முன்வர வேண்டும்.**

**உலகம் -- இயந்திரமயமாகிக் கொண்டு வருகிறது; உள்ளங்களும் இயந்திரங்களாகிவிட்டால், பிறகு உருகி அழுகின்ற கண்களையும், உவகையால் சிரிக்கின்ற உதடுகளையும் காண முடியாது!**

**அந்த நிலைமை ஏற்படாமலிருக்க, மனிதாபிமான உணர்வுடன் எதனையும் அணுகும் அன்புவழி சனநாயக அரசியல் வளர்க்கப்படவேண்டும்."**

---

## வட சென்னை வியாபாரிகள் சங்க ஆண்டு விழா

வட சென்னை வியாபாரிகள் சங்க 15-ஆம் ஆண்டு விழா, 3—12—71 மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் நெடுஞ்சாலை இராமா நாயக்கன் திருமண மண்டபத்தில் நடைபெறும்; திரு. ஈ. ஏ. சுப்பிரமணியனார் தலைமை வகிப்பார்; அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எம். வேதாசலம் எம்.எல்.ஏ., டி. என். அனந்த நாயகி எம்.எல்.ஏ., மற்றும் பலர் பேசுவர்.

---

# மேலும் சில புதிய தடங்களில் விரைவுப்பேருந்து

## 'ஆம்னி பஸ்'களை ஒழிப்பதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை

### நவீன வசதிகளுடன்கூடிய பேருந்துகள் உருவாக்கம் -- அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அறிவிப்பு

மதுரை, நவ. 30—

"மதுரை – கோவை; மதுரை – சேலம் ஆகிய ஊர்களுக்கு இடையே இரவு நேர விரைவுப் பேருந்துகள் விடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது"

என்று போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், செய்தியாளரிடம் கூறினார்.

"மதுரையிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக இன்னோர் இரவு நேர விரைவுப் பேருந்து விடப்படும்" என்றும் அமைச்சர் அறிவித்தார்.

"மதுரை -- சென்னை விரைவுப் பேருந்துகளின் பயண நேரம் 12 மணியிலிருந்து 9½ மணி நேரமாகக் குறைக்கப்படும்" என்றார்.

### திருச்செந்தூருக்குப் பேருந்து

"மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு விரைவுப் பேருந்துகள் விட முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இரண்டு யாத்திரை இடங்களை இணைக்கும் இந்தப் போக்குவரத்து வசதி பக்தர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்றும் கூறினார்.

காலை 6 மணிக்கு மதுரையிலிருந்து புறப்படும் இந்த விரைவுப் பேருந்து 4 மணி நேரத்தில் திருச்செந்தூரை அடையும்; அன்று இரவே மதுரைக்குத் திரும்ப விரும்பும் பக்தர்களுக்கு வசதியாக இந்தப் பேருந்து பிற்பகல் ஒன்றரை மணிக்குத் திருச்செந்தூரிலிருந்து புறப்பட்டு மாலையில் மதுரை வந்து சேரும்.

இதேபோல இன்னொரு பேருந்து மதுரை -- திருச்செந்தூர் இடையே விடப்படும்" என்றார் அமைச்சர்,

'மதுரையிலிருந்து மண்டபம் -- குமிழி -- செங்கோட்டைக்கு அடுத்த வாரம் அரசுப் பேருந்து ஓடத் துவங்கும்; பேருந்துகளைப் பழுது பார்க்க மாவட்டத்திற்கு ஒரு பணிமனை வீதம் துவக்கப்படும்; இது அடுத்த ஆண்டிலிருந்து செயல்படும்" என்றும் தெரிவித்தார்.

அரசுப் பேருந்துகட்குப் போட்டியாக நடத்தப்படும் 'ஆம்னி பஸ்'கள் படிப்படியாக [illegible] செய்யப்படும்; இவற்றிற்குப் பதிலாக அரசு விரைவுப் பேருந்துகள் விடுவதே அரசின் கொள்கை" என்றார் அவர்.

"அரசுப் போக்குவரத்துத் துறை, நவீன வசதிகளுடன் கூடிய '1972 மாடல் பஸ்' என்ற சிறப்பு விரைவுப் பேருந்து விடும்; தோற்றத்திலும் -- அமைப்பிலும் பயணிகள் வசதியிலும் இது புதியதாக இருக்கும்" என்றார்.

### பொங்கலன்று புதிய நிறுவனம்

"மதுரை டி.வி.எஸ். நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட 350 பேருந்துகளைக் கொண்ட பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் சனவரி முதல் நாள் பணியாற்றத் துவங்கினாலும், பொங்கலன்று (சனவரி 14) புதுக் கம்பெனியை முதல்வர் கலைஞர் கருணாநிதி துவக்கிவைப்பார்" என்று அமைச்சர் அறிவித்தார்.

### வண்ண மாற்றம்

"அரசு விரைவுப் பேருந்துகள் இப்போது சிவப்பு நிறத்தில் உள்ளன; இதைப் பச்சையும் வெளிர் மஞ்சள் நிறமும் கலந்ததாக மாற்றப்படும்" என்றும் அவர் கூறினார்.

## சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு விரைவுப் பேருந்து

### இன்றுமுதல் விடப்படுகிறது

சென்னை, டிச. 1—

**சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு இன்றுமுதல் மிகு வேக விரைவுப் பேருந்து விடப்படுகிறது; இனி சென்னையிலிருந்து 14 மணி நேரத்தில் நாகர்கோவிலுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம்.**

**100 மைல்களுக்கு ஒரு முறை இந்தப் பேருந்துகள் நிறுத்தப்படும்.**

நாள்தோறும் சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு 2 பேருந்துகளும், நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு 2 பேருந்துகளும் விடப்படுகின்றன

சென்னையிலிருந்து மாலை 6 மணிக்கும், இரவு 7 மணிக்கும் பேருந்துகள் புறப்படும்; இவை முறையே மறுநாள் காலை 8 மணிக்கும், 9 மணிக்கும் நாகர்கோவில் போய்ச் சேரும்.

இதேபோல், நாகர்கோவிலிலிருந்து மாலை 3 மணிக்கும், 4 மணிக்கும் 2 பேருந்துகள் புறப்பட்டு மறுநாள் காலை 5 மணிக்கும், 6 மணிக்கும் சென்னை வந்து சேரும்.

**சென்னையிலிருந்து புறப்படும் பேருந்து விழுப்புரம்—திருச்சி—மதுரை—நெல்லை ஆகிய நான்கு இடங்களில் நின்று செல்லும்.**

மிகு வேகத்தில் செல்லக்கூடிய இந்தப் பேருந்து போக்குவரத்து இன்றுமுதல் தொடங்குகிறது.

சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லக் கட்டணம், ரூ. 21.30 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

### கோவை --- நாகர்கோவில் இரவு நேரப் பேருந்துகள்

இதேபோன்று, கோவையிலிருந்தும் நெய்வேலியிலிருந்தும், நாகர்கோவிலுக்கு இரவு நேரப் பேருந்துகள் விடப்படுகின்றன; அவை இன்றுமுதல் ஓடத் தொடங்கும்.

கோவையிலிருந்து இரவு 7-30 மணிக்கு ஒரு பேருந்து புறப்பட்டு மறுநாள் காலை 6-25 மணிக்கு நாகர்கோவில் போய்ச் சேரும்.

இதேபோல், நாகர்கோவிலிலிருந்து கோவைக்கு வரும்.

இதற்குக் கட்டணம் ரூ. 14.40 ஆகும்.

### நெய்வேலியிலிருந்து :

நெய்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லும் பேருந்து இரவு 9 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 8 மணிக்குப் போய்ச் சேரும்.

நாகர்கோவிலிலிருந்து மாலை 6 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 6 மணிக்கு நெய்வேலிக்கு வந்து சேரும்.

நெய்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்குப் போகப் பேருந்துக் கட்டணம் ரூ. 15.60 ஆகும்.

### சென்னை -- மதுரை இடையே மிகுவிரைவுப் பேருந்துகள்

சென்னைக்கும் — மதுரைக்கும் இடையே இப்போது உள்ள விரைவுப் பேருந்துகள், மிகு வேக விரைவுப் பேருந்துகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

சென்னையிலிருந்து பிற்பகல் 1 மணிக்கு மிகுவேக விரைவுப் பேருந்து புறப்பட்டு மதுரைக்கு இரவு 10–30 மணிக்கு போய்ச் சேரும்.

இதேபோல், மதுரையிலிருந்து காலை 6-30 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு சென்னை வந்துசேரும்.

இந்தப் பேருந்து, திண்டிவனம்—விழுப்புரம்—திருச்சி ஆகிய ஊர்களில் மட்டுமே நிற்கும்.

### சென்னையிலிருந்து திருச்சிக்கு...

சென்னையிலிருந்து திருச்சிக்கு இப்போது 8 விரைவுப் பேருந்துகள் ஓடுகின்றன; டிச. 5-ந்தேதி முதல் மேலும் 2 பேருந்துகள் விடப்படும்; இந்தப் பேருந்துகள் காலை 6–30 மணிக்கும், 7–30 மணிக்கும் சென்னையிலிருந்து புறப்படும்.

திருச்சியிலிருந்து இரவு 10 மணிக்கும், 10-30 மணிக்கும் இந்த விரைவுப் பேருந்துகள் புறப்படும். கட்டணம் ரூ. 10.10.

### பாண்டிச்சேரி--திருச்சிக்கு :

பாண்டிச்சேரியிலிருந்து திருச்சிக்கு டிச. 5-ந்தேதி முதல் 2 புதிய விரைவுப் பேருந்துகள் விடப்படும்.

பாண்டிச்சேரியிலிருந்து காலை 5-மணிக்கும், மாலை 5-30 மணிக்கும் புறப்படும்.

திருச்சியிலிருந்து காலை 6-30 மணிக்கும், பிற்பகல் 4-30 மணிக்கும் புறப்படும்.

விருத்தாசலம்—நெய்வேலி — கடலூர்—வழியாக இந்தப் பேருந்து போகும்; கட்டணம் ரூ. 7.

### சிதம்பரத்திலிருந்து திருச்சிக்கு...

சிதம்பரத்திலிருந்து கும்பகோணம்—மாயவரம் வழியாக திருச்சிக்கு ஒரு பேருந்தும், மீன்சுருட்டி — ஜெயங்கொண்டம்—அரியலூர் வழியாகத் திருச்சிக்கு ஒரு பேருந்தும், டிச. 5-ந் தேதி முதல் ஓடும்.

சிதம்பரத்திலிருந்து காலை 5-மணிக்கும், 5-30 மணிக்கும் இந்தப் பேருந்துகள் புறப்படும்.

திருச்சியிலிருந்து பிற்பகல் 5-30 மணிக்கும், 5-45 மணிக்கும் இந்தப் பேருந்துகள் புறப்படும்.

---

## அபாயச் சங்கு ஒத்திகை

சென்னை, நவ. 30—

சென்னை நகரில் டிச. 3, 4 ஆகிய நாட்களில் மதியம் 12 மணிக்கும், பிற்பகல் 1-மணிக்குமிடையே சங்குகள் ஒத்திகையைப் போலீசார் நடத்துவர்.

"மின்சார -- இயந்திரத் தொடர்புகள் சரியாக உள்ளனவா என்பதைப் பரிசோதிக்கவே இந்த ஒத்திகையாகும்; இதில் பொது மக்களுக்குத் தொடர்பு எதுவும் இல்லை"

என்று போலீசுக் கமிஷனர் கே. ஆர். ஷெனாய், அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிருர்.

# 'பண்பாட்டுப் பாலங்கள் அமைக்கத் தங்களைப் பணித்துக் கொண்டனர்'

## 'வாழ்க்கையின் நறுமணங்களைப் பரப்பும் மிகச் சிறந்த பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்'

### அமெரிக்காவாழ் தமிழர்களின் நடைமுறைகள்—முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பெருமிதம்

நியூயார்க், டிச 2

"அமெரிக்க மக்களை நேரில் சந்தித்து உறவு கொள்ளவும் அமெரிக்கக் கல்வியாளர்கள் சிலரைச் சந்தித்து முக்கிய ஆலோசனைகள் நடத்தவும் அமெரிக்காவுக்கு வருகை தந்திருக்கும் தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களின் உள்ளத்தை இந்திய—அமெரிக்கப் பண்பாட்டு உறவுகள் கவர்ந்துள்ளன; விஞ்ஞானப் புதுமைகளால் தம் மக்களுக்கு ஏற்படக் கூடிய வாய்ப்புகள் கண்டு அவர் பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார்"

என்று அமெரிக்கத் தகவல் நிலையம் குறிப்பிட்டிருக்கிறது; இத் தொடர்பில் அது கூறியிருப்பதாவது :—

"கடந்த நவம்பர் 27ந் தேதியன்று நியூயார்க் நகரில் தமிழ்ச் சங்கத் துவக்க விழாவுக்கு முதல்வர் தலைமைதாங்கினார்; இந்தியா மாளிகையில் இவ்விழா நடைபெற்றது; அமெரிக்காவிலே இந்திய வாழ்க்கையும் பண்பாடும் சிறப்பாக உணரச் செய்வதற்கு பல சங்கங்கள் அமைக்கப்பட்டிருப்பதை முதலமைச்சர் குறிப்பிட்டார்.

"நட்புடன் இருக்கும் அந்நிய நாடு ஒன்றில் குடியேறியிருக்கும் தமிழர்களும்—அவர்களுடைய மக்களும், தம் பண்பாடு—துடிப்பும் ஆற்றலும் உடையதாக வைத்திருக்கும் வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இப்புதிய சங்கம் தோன்றிவிட்டதால், இந்திய சமுதாயத்தில் மிக முக்கிய இடம் பெற்றுள்ள 4 கோடி மக்களின் கவிதை உள்ளம்—பண்பு ஆகியவற்றை அறிமுகம் செய்து வைக்கும் சிறப்பும்—வாய்ப்பும்—பொறுப்பும் இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டன; பெரும் பண்பாடு ஒன்று, வேறு ஒரு பண்பாட்டினை அடக்கவோ உருமாற்றவோ முடியாது; ஆனால், ஒருவருக்கொருவரான தொடர்புகளின் வழியாக இரண்டு பண்பாடுகளுமே வளம் பெற முடியும்" என்றார் தமிழக முதல்வர்.

டாக்டர் கருணாநிதி அவர்கள், புகழ்பெற்ற எழுத்தாளர்; ஏறத்தாழ 150 சிறு கதைகள்—20 நாடகங்கள்—35 திரைப் படங்களுக்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்; பல கவிதைகள் புனைந்திருக்கிறார்.

இரவி சங்கர் இன்னும் மற்ற இந்தியர்கள் இந்த நாட்டிலே நீண்டகாலம் தங்கிப் பண்பாட்டுப் பாலங்கள் அமைக்கத் தங்களைப் பணித்துக் கொண்டமைக்கு அவர்களைப் பாராட்டினார் தமிழக முதலமைச்சர்.

"அவர்கள் அமெரிக்காவிலே தங்கியிருக்கையில் இதுவே அவர்கள் செய்யும் மிகச் சிறந்த முக்கிய பணி; இந்திய வாழ்க்கையின் நறுமணங்களை—சொல்லப்போனால் உலகின் பலவகையான வாழ்க்கையின் நறுமணங்களை அவர்கள் பரப்புகின்றனர்" என்றார் டாக்டர் கருணாநிதி.

தனித் திறமையுடைய தனிப்பட்ட இந்தக் கலைஞர்களுடையவும், இப்போது புதிதாகத் தோன்றியிருக்கும் தமிழ்ச் சங்கம் போன்ற குழுக்களுடையவும் பண்பாட்டுத் தூண்டுதல் இல்லையேல், 'ராகா' என்ற மிகச் சிறந்த விவரணப் படம் எப்படி உருவாகியிருக்கும்? சென்ற வாரம் நியூயார்க்கில் திரையிடப்பட்ட இந்தப் படத்தைத் தயாரித்தவர்கள் அமெரிக்கர்" என்றார் முதல்வர்.

இந்திய இசையின் அழகையும், இரவி சங்கரின் தத்துவம்—வாழ்க்கைக் குறிக்கோள் ஆகியவற்றையும் அவர்கள் முற்றிலும் உணர்ந்திருக்க வேண்டும்; அவர்கட்குப் பொருளிலே அவ்வளவு பற்றுண்டு; இந்தப் படம் உயர் தரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்றே நான் கருதுகிறேன்; அந்நியப் பண்பாடு ஒன்றின் குறிக்கோளை அப்படியே வேறு பண்பாட்டினருக்கு விளக்கும் கலைத் திறம் வாய்ந்த ஒரு சிறந்த மேன்மையான முயற்சி என்பேன்" என்றார்.

#### கல்விக்கு முதலிடம்

அமெரிக்க செய்தி நிறுவனம் மேலும் கூறியிருப்பதாவது:—

"நவ. 25-ம் நாள் நியூயார்க் நகர் வந்த டாக்டர் கருணாநிதி ஐந்து நாட்கள் தங்கியிருந்தார்; பள்ளி நிர்வாகிகள்—கல்வியாளர்கள் பலரை அவர் சந்தித்தார்; நியூயார்க் கல்வி வாரியத்தின் தலைவர் டாக்டர் ஹார்வி ஸ்கிரைப்னர் என்பவரையும் முதல்வர் சந்தித்தார்.

"அமெரிக்காவில் இருக்கும் எந்தப் பள்ளிகளினுடையவும் கல்வி முறையின் உயர் தரத்துக்கு ஈடாகத் தமிழ்நாடு—தன் மக்களுக்கும் தரமான கல்வி அளிப்பதில் அக்கறை கொண்டிருக்கிறது; உண்மையில் கல்விக்கு—உடல் நலம், சமுதாய நலம் ஆகியவற்றுடன்—நாங்கள் முதலிடம் கொடுத்துள்ளோம்; புதிய முறைகள், சீர்திருத்தத் திட்டங்கள் வழியாக வேளாண்மை உற்பத்தியில் நாங்கள் உபரி நிலையை அடைந்துவிட்டபடியால்—இதுவே நீண்ட காலமாக எங்களுடைய முதல் அக்கறையாக இருந்துவந்தது—இப்பொழுது கல்விக்கு முதலிடம் கொடுத்துள்ளோம்" என்றார் தமிழக முதலமைச்சர்.

#### கம்பியூட்டர் பொறியும் கல்வித் திட்டமும்

"தமிழகத்திலே ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கும் புதிய கருத்துக்களையும்—கல்வி கற்பிக்கும் முறைகளையும் செவிமடுத்து மிக உன்னிப்பாகக் கேட்டு அறிந்துகொண்டேன்" என்றார் அவர்.

"இதுவரையில் என்னை மிகவும் கவர்ந்திருப்பது—கம்பியூட்டர் பொறியைக் கல்வித் திட்ட வளர்ச்சிக்கும்—நிர்வாகத்துக்கும்—'ரிக்கார்டு' வைப்பதற்கும் பயன்படுத்திவருவதுதான்" என்றார் அவர்.

"கணக்கற்ற பிரச்சினைகளைச் சமாளிக்கக் கல்வித் துறையிலே அமெரிக்கர்கள் கம்பியூட்டர் பொறி இயலைப் பயன்படுத்திவருவது, என்னை மிகவும் கவர்ந்துள்ளது" என்றார்.

#### ஒப்பிட்டு நோக்கினால் சிக்கலாகிவிடும்

"அமெரிக்கக் கல்வி முறையுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் இருக்கும் பள்ளிக் கல்வி முறையானது மாநில முறையாகவும் எளிதாகவும் இருக்கிறது; ஆனால் இந்தியக் கல்விப் பணி விரிவாக்கப்படுகையில் அது சிக்கலாகிவிடலாம்; பல சிக்கல்கள் குறிப்பாகத் தமிழகத்தில் தோன்ற இடமுண்டு; தமிழ்நாட்டிலே மக்கள் தொகை விகிதம்—தேசிய சராசரி விகிதத்தை விட—கிட்டத்தட்ட இரண்டு பங்கு ஆகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

#### பிரச்சினைக்கு எதிராக என்ன செய்வது?

கவிதை உள்ளம் படைத்தவராயினும் டாக்டர் கருணாநிதி அவர்கள், கம்பியூட்டர் பொறிக்கு ஆதரவு தருகிறார்—கல்வியை கம்பியூட்டர் பொறி மனிதத் தொடர்பற்றதாக ஆக்கக் கூடியதாக இருந்தாலும்!

"மனிதனின் எந்தப் பணியிலும்—இயந்திரங்களைப் புகுத்துகையிலும், தானியங்கு பொறியைப் பயன்படுத்துகையிலும் ஓரளவு மனிதத் தொடர்பு அற்றுப் போகிறது; ஆனால் கம்பியூட்டர்பொறியின் சாதனையைக் கருத்தில் கொள்கையில், இது பொருட்படுத்தக்கூடியதல்ல; பெருகிவரும் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதிலே நடைமுறையில் நிறைவேற்றக்கூடிய திட்டத்தைத் தருகிறது கம்பியூட்டர் பொறி; இதற்கு மாற்று என்ன?—பிரமிக்க வைக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக இடையறாத போராட்டம்தான்" என்றார் முதல்வர்.

#### மக்கள் நலத்துக்கு நன்மை செய்யும்

கென்னடி முனைக்குச் சென்று வந்ததை தமிழக முதல்வர் நினைவு கூர்ந்தார்; விஞ்ஞான ஆராய்ச்சிக்கும்—விண்வெளித் திட்டங்களுக்கும் தமது ஆதரவைத் தெரிவித்தார்; 'அம்புலியில் மனிதனைக் கொண்டுசேர்க்கும் விஞ்ஞான நுட்பம் மக்கள் குலத்துக்கு பல வகையான நன்மைகளைத் தருகிறது' என்று சுட்டிக் காட்டினார்.

"வேளாண்மை முதல் மருத்துவம்வரை பல்வேறு துறைகளில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துகின்றனர்; இது, உலக மக்கள் அனைவரின் நலத்துக்கு வகை செய்யும் வழியில் நம்மைக் கொண்டுவிடும்" என்று சுட்டிக் காட்டினார்.

#### அதிகாரிகட்குப் பாராட்டு

தமது பயணத் திட்டத்தை அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் கையாண்ட விதத்துக்குத் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார் டாக்டர் கருணாநிதி; அவர்களுடைய ஒத்துழைப்புக்கும்—குறிப்பாக தமது விருப்பங்களை நிறைவேற்ற அவர்கள் உள்ளன்புடன் முன்வந்ததற்கும் தமது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புவதாகக் கூறினார்.

"அமெரிக்க வாழ்க்கையிலே அரசியல் துறையில் ஆகட்டும்—இனப் பிரச்சினையில் ஆகட்டும்—'கெட்டோ' என்ற சேரிப் பகுதிகளுக்குச் செல்லும் போதாகட்டும்—நான் பார்க்கக் கூடாதது என்று ஒளித்து மறைத்து வைக்கப்பட்டது ஒன்றும் இல்லவே இல்லை" என்று குறிப்பிட்டார்.

"இந்தியாவில் எங்களுக்கும் சேரிகள் இருக்கின்றன; பிரச்சினைகள் உள்ளன; அரசியல் வேற்றுமைகள் உள்ளன; அவற்றை நாங்கள் எப்படிச் சமாளிக்கிறோம் என்பதைக் கவனிக்கும் போது, அது அக்கறையுள்ள ஒன்றாகிறது" என்றார் முதல்வர்.

நியூயார்க் நகரில் இருக்கையில் தமிழக முதல்வர், நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ்—ஐ. நா. ஆகியவற்றுக்குச் சென்றார்.

ஐ. நா.-வில் அவர் பொதுச் சபைக் கூட்டத்திற்குப் போனார்.

'ரேடியோ சிட்டி மியூசிக் ஹால்' என்ற புகழ்பெற்ற அரங்கிலே கிறிஸ்துமஸ் விழாக் காட்சி ஒன்றைப் பார்த்தார்; பிராட்வே நாடகம் ஒன்றையும் பார்த்தார்; நகரின் பல முக்கிய இடங்களையும் சென்று பார்த்தார்.

ஐ. நா. அலுவலகத்தில் துணைச் செயலாளர் சி. வி. நரசிம்மன் முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தார்.

கடந்த ஞாயிறன்று ஊர் சுற்றிப் பார்த்தபின்னர் டாக்டர் பீட்டர் குமரேசாவுடன் விருந்துண்டார்; தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்த்தப்பட்டிருப்பவர் டாக்டர் குமரேசா; கோன் தீவு மருத்துவமனையில் பணியாற்றுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# பாகிஸ்தான் இராணுவத்தினர் ஓட்டம் பிடிக்கின்றனர்

## பரவலான பகுதிகளை விடுதலை வீரர்கள் மீட்டு வெற்றிக் கொடி நாட்டுகின்றனர்

முஜிப் நகர், டிச. 2—

கிழக்கு வங்க விடுதலைப் படையினர் நாளும் வெற்றி பெற்று பரவலான பகுதிகளைப் பாகிஸ்தான் இராணுவத்தினரிடமிருந்து மீட்டு வருகின்றனர்.

சில்ஹெட், ரங்பூர் மாவட்டங்களில் பல இடங்களிலும் விடுதலைப் படையினர் வெற்றிக் கொடி நாட்டி வருகின்றனர்.

ஜெஸ்சூர்—டாக்கா இராணுவ முகாம்களைக் கைவிடாமலிருக்கப் பாகிஸ்தான் இராணுவம் அரும் பாடுபட்டு வருகிறது; மேற்கும் பாகிஸ்தானிலிருந்து மேலும் துருப்புக்களை வரவழைக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பல பகுதிகளிலிருந்தும் இராணுவ ஆதிக்கப் படையினர் ஓட்டம் பிடித்து வருவதாகவும்—அங்கெல்லாம் விடுதலைப் படை நிர்வாகத்தைக் கைப்பற்றி வருவதாகவும் தெரியவருகிறது.

சில போலீசு நிலையங்களில் வங்க தேசக் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றனவாம்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் கூறிய கருத்துக்களுக்கு இணங்க—இத்திருத்தங்களை முன்மொழியவில்லை" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறினார்.

"வழிநடத்தும் கோட்பாடுகளைச் சட்ட உருவில் கொண்டு வரும்போது, சட்டமன்றத்திலும்—நாடாளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கவேண்டும்—என்ற திருத்தத்தைக்கொண்டு வந்தால், அப்படிப்பட்ட சட்டத்தையே இயற்ற முடியாமல் போய்விடும் என்று தி. மு. கழக உறுப்பினர்களும்—மற்றும் பலரும் கூறப்பட்ட கருத்து சரியானதே" என்று தலைமையமைச்சர் ஒப்புக்கொண்டார்.

### 39 'பி—சி' பிரிவுகளின் கொள்கைகள் என்ன?

அரசியல் சட்ட 39 'பி' பிரிவு வழிநடத்தும் கொள்கை கூறுவதாவது:—

"சமுதாய — பொருளாதார வளத்தின் சொந்தமும், நிர்வாகமும், பொது நலனுக்குச் சிறந்த முறையில் உதவக்கூடியவாறு வழங்கப்பட்டிருக்க வேண்டும்."

அரசியல் சட்ட 39 'சி' கொள்கை கூறுவதாவது:—

"பொதுநலனுக்குப் பாதகமான முறையில் சொத்தும்—உற்பத்திச் சாதனமும் குவியக் கூடியவாறு பொருளாதார அமைப்பு இயங்கக் கூடாது."

பொதுப்பணித் துறை அமைச்சர்

### எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

டிச. 3 மாலை 4-15 மணி: திருத்தணி—வட்ட கூட்டுறவுச் சங்க துவக்க விழாவில் கலந்து கொள்ளுதல்; 4-30 மணி: திருத்தணி—தமிழ்நாடு கூட்டுறவு சங்க விழாவில் கலந்துகொள்ளுதல்; 5-45 மணி: பள்ளிப்பேட்டை—குசத் தலையாற்றைப் பார்வையிடுதல்; 6-மணி: பள்ளிப்பேட்டை—நிலவள வங்கியில் அறிஞர் அண்ணா படத் திறப்பு; இரவு 7-மணி: பொடத்தூர்பேட்டை—திருத்தணி பாதை சீர்திருத்த வேலை தொடக்க விழாவில் கலந்துகொள்ளுதல்.

# இந்தியாவுக்கு ஆயுதம் அனுப்புவதற்குத் தடை

## அமெரிக்க அரசின் திடீர் நடவடிக்கை

வாஷிங்டன், டிச. 2—

இந்தியாவுக்கு ஆயுதங்களை அனுப்புவதற்கான அனுமதியை அமெரிக்க அரசு நேற்றுமுதல் திடீரென நிறுத்திவைத்திருக்கிறது.

ஆயுதங்களுக்கான புதிய லைசென்சுகள் வழங்கப்பட மாட்டாது; அத்துடன், இப்போதுள்ள லைசென்சுகளும் புதுப்பிக்கப்பட மாட்டாது.

சுமார் 20 இலட்சம் டாலர் (ரூ. 1.5 கோடி) பெறுமானமுள்ள பல ஆயுத லைசென்சுகள்—தளவாட உற்பத்திக்கான இயந்திரங்கள்—தளவாட பதிவிடப்பு உருப்புக்கள் போன்றவைகளுக்கான லைசென்சுகள் ரத்தாகின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவதற்காக இந்திய இராணுவப் படைகள் எல்லையைக் கடந்ததாகப் புகார் செய்ததன்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமெரிக்க அரசின் அதிகாரிகள் சமாதானம் கூறினர்.